# இறைவனின் அன்னையாகிய தூய கன்னி மரியா பெருவிழா - சனவரி 01

## திருப்பலி முன்னுரை

மகிழ்ந்திருங்கள் மகிழ்ந்திருங்கள்!

புத்தாண்டிற்குள் புகுவோம் மகிழ்ந்திருங்கள்

கடந்த ஆண்டின் இறைவன் அரவணைப்பிற்காக நன்றி!

வெகுமதியாய் புது ஆண்டை அளித்தமைக்காக நன்றி!

ஆம். நன்றியோடும் மனம் நிறைந்த மகிழ்வோடும் புத்தாண்டை வரவேற்க புனிதரின் பாதம் கூடி வந்திருக்கும் அன்புள்ளங்களே! அனைவருக்கும் பிறக்க இருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறி இத்திருப்பலிக்கு வரவேற்கிறோம்.

புதிதாகப் புறப்பட்ட விடியலில்

புன்னகைப் பூக்கள் பூக்கட்டும்

மகிழ்ச்சி மணம் பரவட்டும்

இறைவனோடு இதயம் இணையட்டும்

ஒவ்வொரு நாளும் இறைவன் அனுமதியின்றி நம்மில் நுழைவதில்லை. காயங்களும் கண்ணீரும் இறைவன் அனுமதித்தவை. அவற்றை மேற்கொள்ளத் தேவையான ஆளுமையையும் அளித்தவர் அவரே. இதை உணர்ந்து விசுவசித்தால் விடியும் ஒவ்வொரு நாளும் புத்தாண்டு தான்.

முடியும் இந்த இரவு

கவலைகளின் முடிவாய் இருக்கட்டும்.

மலரும் நாளைய பொழுது

மகிழ்வின் ஆரம்பமாய் இருக்கட்டும்.

கடந்த ஆண்டில் நாம் செய்த நம்மால் செய்யப்பட்ட அனைத்து காரியங்களையும் நம் மனக்கண் முன் நிறுத்துவோம்.

அன்பற்ற வார்த்தைகளை உதிர்த்த உதடுகளுக்காக மன்னியும் தேவனே

பண்பற்ற செயல்களில் பங்கேற்ற பொழுதுகளுக்காக மன்னியும் தேவனே!

இயற்கையை சிதைத்து ஏராளமாய் செல்வம் சேர்த்து, வயலை வீழ்த்தி வீட்டு மனையாக்கி, தோட்டத்தை தோண்டி தொழிற்சாலையாக்கி, அரிசியை ஆன்லைனில் டவுன்லோடு செய்யும் அவலத்தை ஏற்படுத்தியதற்காக மன்னியும் தேவனே!

'இறைவன் உலகத்தை படைக்கும் போது, புற்பூண்டுகளையும், விதை தரும் செடிகளையும், கனி தரும் பழ மரங்களையும் அந்தந்த இனத்தின் படி நிலம் விளைவித்தது. கடவுள் அது நல்லது என்று கண்ட விவசாயம் சரிவை நோக்கி விவசாயி சரிவை நோக்கி கலப்பினம் என்றும் வேளாண் புரட்சி என்றும் பாரம்பரிய வித்துக்களை ஒழித்து விட்டோம். இப்போது பெயர் அறியா நோய்களும் கலர் கலராய் மருந்துகளும் படையெடுக்க அனுமதித்து விட்டோம். இந்தியாவை பீடித்த இக்கொடிய நோய் இன்றோடு விரட்டியடிக்கப்பட்டு இறைவன் விரும்பும் தேசமாய், இறைவன் உருவாக்க விரும்பிய தேசமாய் மாற இப்புத்தாண்டு பூமழை பொழியட்டும்.

புத்தாண்டே வருக ! புதுவாழ்வைத் தருக

இன்னுமொரு இனிய ஆண்டே வருக

ஏழ்மை இல்லாத இந்தியாவைத் தருக

புத்தாண்டே வருக! யுத்தமில்லா யுகத்தைத் தருக

முடிந்ததை மறப்போம்! நடப்பதை நினைப்போம்

நாளைய விடியல் நல்லதாய் அமைய இப்பலியில் பிராத்திப்போம்

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. இனிய பாதையில் எம்மை நடத்திச் செல்பவரே!

எம் திரு அவையை வழி நடத்தும் தலைவர்கள், பணியாளர்கள், தங்கள் அழைப்பின் மேன்மையை உணர்ந்து, உண்மை வழியில் நடக்கவும், மக்களை நேரிய பாதையில் நடப்பிக்கவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நற்செயல்களின் பிறப்பிடமே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள், ஆட்சியாளர்கள் கடமையை அறிந்து நிறைவேற்றவும், கயமை களையப்படவும் நற்செயல்களின் மூலம் சமத்துவத்தை நிலை நாட்டி இனிய பாரதத்தை உருவாக்கிட வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. புது வாயில்களை உருவாக்குபவரே எம் இறைவா!!

எம் நாட்டில் உள்ள தலையாய தேவைகளுக்கான வழியை அமைத்துத் தரவும், இயற்க்கையை அழிக்காமல், இயற்கை வளங்களைப் பேணி, தகுதியான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, புதிய வேலைவாய்ப்புகள், வேளாண்மை ஏற்றம் பெறவும் வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. குணமளிக்கும் தெய்வமே!

எம் குடும்பங்களிலும், பகுதிகளிலும் உடல் நோயினாலும் உள நோயினாலும் அவதிப்படுபவர்கள் விரைவில் குணமடைந்து, நிம்மதியான எதிர்காலத்தை எதிர்கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. நலன்களின் நாயகனே!

எம் பகுதிவாழ் மக்களைன் ஆசீர்வதியும். குடும்பங்களில் அமைதி, சந்தோசம் பெருகவும், நீர்நிலைகள் நிரம்பி விவசாயம் சிறக்கவும், வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தைவரம் வேண்டுவோர் உமதருளால் பெற்று மகிழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com